# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1689/22 - 2011 ජනවාරි 21 වැනි සිකුරාදා - 2011.01.21

*1689/22 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. — பீ. 94/47* (iii).

**(269 ஆம் அத்தியாயமான) நாடு நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டம்**

*6 (2) (ஆ) மற்றும் 21 (2) (ஆ) என்னும் பிரிவுகளின் கீழான கட்டளை*

(269 ஆம் அத்தியாயமான) நாடு நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியினாலும், 21 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியினாலும் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ச ஆகிய நான், இக்கட்டளையின் மூலம் :-

(அ) மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கத்திற்காக இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்படும் காணி இடப்பரப்பு நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாதல் வேண்டுமென்பதுடன் "ஹலபத்த ரஜ மஹா விகாரை புனித இடப்பரப்பு" என அழைக்கப்படுதலும் வேண்டும் என வெளிப்படுத்துகின்றேன் ;

(ஆ) "ஹலபத்த ரஜ மஹா விகாரை புனித இடப்பரப்பாக" வெளிப்படுத்தப்பட்ட முழு இடப்பரப்பு தொடர்பிலும் உருவரைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமெனப் பணிக்கின்றேன்.

விமல் வீரவன்ச,<br>
நிர்மாண, பொறியியல் சேவைகள்,<br>
வீடமைப்பு மற்றும் பொது வசதிகள்<br>
அமைச்சர்.

நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு<br>
மற்றும் பொது வசதிகள் அமைச்சு.<br>
கொழும்பு,<br>
2011, சனவரி 13

**அட்டவணை**

கலபத்த ரஜ மஹா விகாரை புனித இடப்பரப்பைக் கொண்டுள்ள காணி இடப்பரப்பு

தென் மாகாணத்தின் காலி நிர்வாக மாவட்டத்தில் பெந்தோட்ட பிரதேச செயலாளர் பிரிவினுள் குன்கன்தோட்ட கிராமத்தில் அமைந்துள்ளதும் 2009 ஆம் ஆண்டு செத்தெம்பர் 28 ஆந் திகதியிடப்பட்ட சுவட்டு இலக்கம் ஜிஏ/பிஎன்/09/50 ஐக் கொண்டதும்

***அட்டவணை*** *(தொடர்ச்சி)*

*நிலஅளவையாளர் தலைமையதிபதியினால் காட்டப்பட்ட 2.0216 ஹெக்டேயார் விஸ்தீரணத்தைக் கொண்டதுமான காணி இடப்பரப்புகள் அத்துடன் அதன் எல்லைகள் பின்வருமாறு:-*

*வடக்கில் :* *ஆர். எம். சீலவதி மற்றும் ஏனையோர்களினால் உரிமைகோரப்படுகின்ற வாசலவத்த என அழைக்கப்படும் காணி, பிரதேச சபை வீதி மற்றும் மைத்திரி கேவாவசம் அவர்களினால் உரிமைகோரப்படுகின்ற ஹெட்டியம்மாவத்தை ;*

*கிழக்கில் :* *எச். டீ. பியசீலி, பி. எச். குணசேகர அவர்களினால் உரிமைகோரப்படுகின்ற கொலுவகவத்தை மற்றும் வீரசேகர கேவத்த, வீதி, திஸார தீப குமார அவர்களினால் உரிமைகோரப்படுகின்ற பத்தேவத்த, பீ. டீ. வைலட் சந்ராணி அவர்களினால் உரிமைகோரப்படுகின்ற கலகாவ ஓவிட்ட, யூ. ஏ. சாந்த ஜயசிங்ஹ மற்றும் ஏனையோர்களினால் உரிமைகோரப்படுகின்ற மொகட்டியி வத்த மற்றும் ஹெட்டிகேவத்த, ஆரியவன்ச அத்துக்கோரள மற்றும் ஏனையோர்களினால் உரிமைகோரப்படுகின்ற கடுகேபலவத்த ;*

*தெற்கில் :* *ஹில்டா பியசீலி மற்றும் ஏனையோர்களினால் உரிமைகோரப்படுகின்ற ஹன்கன்தோட்டவெல மறுபெயர் கேரவ ;*

*மேற்கில் :* *பி. குசுமலதா அவர்களினால் உரிமைகோரப்படுகின்ற ஹேவகபுகவத்த மற்றும் கனேவத்த, வீதி, யூ. ஏ. ஷமத் சுரனிமல மற்றும் ஏனையோர்களினால் உரிமைகோரப்படுகின்ற பகினிஹகலியத்த, ஆர். எம். சீலவதி மற்றும் ஏனையோர்களினால் உரிமைகோரப்படுகின்ற வாசலாவத்த மற்றும் பிரதேச சபை.*

*2- 117/1*

---

*ச. வ. பீ. 94/47* (iii).

***(269 ஆம் அத்தியாயமான) நாடு நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டம்***

*6 (2) (ஆ) மற்றும் 21 (2) (ஆ) என்னும் பிரிவுகளின் கீழான கட்டளை*

*(269 ஆம் அத்தியாயமான) நாடு நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியினாலும், 21 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியினாலும் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ச ஆகிய நான், இக்கட்டளையின் மூலம் :-*

*(அ)* *மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கத்திற்காக இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்படும் காணி இடப்பரப்பு நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாதல் வேண்டுமென்பதுடன் ''சூரியகொட ஸ்ரீ நரேந்ரராம ரஜ மஹா விகாரை புனித இடப்பரப்பு'' என அழைக்கப்படுதலும் வேண்டும் என வெளிப்படுத்துகின்றேன் ;*

*(ஆ)* *''சூரியகொட ஸ்ரீ நரேந்ரராம ரஜ மஹா விகாரை புனித இடப்பரப்பாக'' வெளிப்படுத்தப்பட்ட முழு இடப்பரப்பு தொடர்பிலும் உருவரைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமெனப் பணிக்கின்றேன்.*

*விமல் வீரவன்ச,*
*நிர்மாண, பொறியியல் சேவைகள்,*
*வீடமைப்பு மற்றும் பொது வசதிகள்*
*அமைச்சர்.*

*நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு*
*மற்றும் பொது வசதிகள் அமைச்சு.*
*கொழும்பு,*
*2011, சனவரி 13.*

**அட்டவணை**

சூரியகொட ஸ்ரீ நரேந்ரராம ரஜ மஹா விகாரை புனித இடப்பரப்பைக்
கொண்டுள்ள காணி இடப்பரப்பு

மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில் யட்டி நுவர பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கங்க பலாத்த கோறளவில் சூரியகொட கிராமத்தில் அமைந்துள்ள தெல்கக கும்புர, மெத கும்புர, தொராங்க கும்புர, விஹாரவத்த, தாதுபேல கும்புர மற்றும் பூஜாகொட வத்த என அழைக்கப்படும் காணியின் ஒன்று சேர்க்கப்பட்ட காணித்துண்டுகள் ஏ. பீ. சீ. டீ. மற்றும் ஈ யும் நிலஅளவையாளர் தலைமையதிபதியினால் ஆக்கப்பட்ட மஹா/வைரிஎன்/2006/069அ என்னும் சுவட்டு இலக்கத்தைக் கொண்ட சூரியகொட ரஜ மஹா விகாரை என அழைக்கப்படும் 4.3493 ஹெக்டேயார்கள் விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு அடங்கலும் அதன் எல்லைகள் பின்வருமாறு:-

வடக்கில் : டபிள்யூ. எச். எம். ரம்பண்டா மற்றும் ஏனையோர்களினால் உரிமை கோரப்படுகின்ற ரண்டவ கும்புர என அழைக்கப்படுகின்ற காணி, பி. பீ. ரத்நாயக்கவினால் உரிமைகோரப்படுகின்ற உடுவல ஹெதரவத்த என அழைக்கப்படும் காணி பிரதேச சபை வீதி, ஆர். டபிள்யூ. எம். அபேரத்ன பண்டா மற்றும் ஏனையோர்களினால் உரிமைகோரப்படுகின்ற ஹெதர கும்புர மற்றும் செலமுன கும்புர காணிகள் ;

கிழக்கில் : ஆர். டபிள்யூ. எம். அபேரத்ன பண்டா மற்றும் ஏனையோர்களினால் உரிமைகோரப்படுகின்ற ஹெதர கும்புர மற்றும் செலமுன கும்புர. எம். பீ. ரத்நாயக்க மற்றும் ஏனையோர்களினால் உரிமைகோரப்படுகின்ற ஹமஹெதர வத்த, வீடுகளுக்குச் செல்லும் வீதி, ஆர். எம். செனவிரத்ன மற்றும் ஏனையோர்களினால் உரிமைகோரப்படுகின்ற ஹமஹெதர வத்த என அழைக்கப்படுகின்ற காணி, வீடுகளுக்குச் செல்லும் வீதி ;

தெற்கில் : வீடுகளுக்குச் செல்லும் வீதி, ஆர். எம். செனவிரத்ன மற்றும் ஏனையோர்களினால் உரிமைகோரப்படுகின்ற பெலன வத்த, ஹீங்கெந்த மற்றும் ஏனையோர்களினால் உரிமைகோரப்படுகின்ற பெலன வத்த , பிரதேச சபை வீதி, எஸ். அத்தநாயக்க மற்றும் ஏனையோர்களினர்ல் உரிமைகோரப்படுகின்ற நய்கொட்டதெனிய என அழைக்கப்படுகின்ற காணி மற்றும் வீடுகளிலிருந்து வரும் வீதி ;

மேற்கில் : வீடுகளிலிருந்து வரும் வீதி, ரி. விஜேவீர மற்றும் ஏனையோர்களினால் உரிமைகோரப்படுகின்ற பரக்மனிய வத்த, டபிள்யூ. எச். எம். ரம்பண்டா மற்றும் ஏனையோர்களினால் உரிமைகோரப்படுகின்ற ரந்தவ கும்புர.

*2- 117/2*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.